முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.17.09.2025

O.S. 195/22

வா.சா.2 குமரி செல்வன்

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் சரக்கல்விளை தொடக்கவேளாண்மை கூட்டறவு சொசைட்டியில் சேல்ஸ் விற்பனையாளராக 30 வருடங்களாக வேலைபார்த்து வருகிறேன். நான் B.Com படித்துள்ளேன். 1996 ஆம் ஆண்டு வேலையில் சேர்ந்தேன் மாதம் தேதி நியாபகம் இல்லை. 1996 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை தொடர்ந்து ஒரே இடத்தில் வேலை பார்த்து வருகிறேன். காலையில் 9 மணிமுதல் மாலை 6 மணிவரை நான் சொசைட்டியில் வேலை பார்ப்பேன். நான் ரேசன்கடை பிரிவில் வேலைபார்க்கிறேன். நான் வேலைக்கு சேரும் போது 638 குடும்ப அட்டைகள் இருந்தது. தற்போது 939 கார்டுகள் உள்ளது. நான் வேறு எந்த வேலைகளிலோ, தொழில்களிலோ ஈடுபடவில்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்ல சொல்ல வக்கீல் அலுவலகத்தில் வைத்து வாதி வழக்கறிஞரால் தட்டச்சு செய்யப்பட்டது. ஸ்ரீ பைனான்ஸ் நிறுவனத்தை நடத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் எனது அப்பா நடத்தி வருகிறார் நான் நடத்தவில்லை. எனது தந்தை கிருஷ்ணமூர்த்தி ஸ்ரீ பைனான்ஸ் நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்று சொல்லவில்லை. ஸ்ரீ பைனான்ஸ் நிறுவனத்திற்கு உரிமம் பெற்றுள்ளார். தமிழக

அரசின் கீழ் உரிமம் பெற்றுள்ளார். அதன் எண் எனக்கு தெரியாது. நான் ஸ்ரீபைனான்ஸ் நடத்தியதாக சொல்லிய விபரம் தவறு. எனது அப்பா கிருஷ்ணமூர்த்திக்கும் , வாதியின் அப்பா சண்முகத்திற்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கும் சண்முகத்திற்கும் பழக்கம்.

3. ஸ்ரீபைனான்ஸ் நிறுவனத்திற்கு கணக்கு தணிக்கை செய்வது உண்டு. நகைகளுக்கு கடன் கொடுக்கும் நிறுவனம் ஆகும். அடகு நிறுவனத்திற்கு எனது அப்பா பெயருக்கு உரிமம் உண்டு. ஸ்ரீபைனான்ஸ் சம்பந்தமான உரிமத்தை நான் இந்த வழக்கில் ஆஜர் செய்யவில்லை. பட்டிகை சொத்தில் தென்னைமரங்களோ, பலன் தரக்கூடிய மரங்கள் தொடர்பான விபரங்கள் எனக்குதெரியாது. அந்த சொத்துக்களில் இருந்த மரங்களுக்கு பாட்டம் கொடுத்தது யாருக்கு பாட்டம் கொடுத்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த சொத்திற்கு எனக்கும் சம்பந்தம் கிடையாது. கடைக்கு வாடகை கொடுத்ததாக ரசீது ஏதும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. ரசீது எதுவும் நான் வாங்கியதில்லை. 01.07.2004 ல் நானும், திரவியம் நாடாரும் சேர்ந்து வாடகைக்கு எடுத்ததாக ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் பதிவு செய்யப்படாத ஆவணம் இருக்கிறது. அந்த ஆவணத்தின் அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியாது. அசல் உரிமையாளரிடம் உள்ளது.

4. சண்முகம் 01.07.2004 ல் வாடகை உடன்படிக்கை பத்திரத்தை ஏற்படுத்தி நகலை என்னிடம் கொடுத்தார். அசலை அவர் வைத்து கொண்டார். முன்பணம்

ரூ.15000/- கொடுத்ததற்கு வேறு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எந்த காலத்திலும் வாதியின் அப்பா சண்முகத்திடம் வாடகைதாரராக வழக்கு பட்டிகை சொத்தில் இருந்ததா என்றால் இல்லை. வாடகைதாரராக சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டதா என்றால் சரியல்ல. பிரமாண பத்திரத்தில் நான் சொல்லியது போல் வாடகை ஒப்பந்தத்தின் அசலை கொடுத்திருக்க முடியாது என்றால் சரிதான்.

5. எனவே அவ்வாறு சொல்லப்பட்ட சங்கதிகள் தவறானவை என்றால் சரி. வாதியை எனக்கு எவ்வளவு வருடம் பழக்கம் என்றால் 30 வருடத்திற்கு மேலாக இருக்கும், 2 வது பாராவில் தொழில் செய்ய எனக்கு அனுமதி பெற்று தந்ததாக சொல்லிய விபரம் தவறானவை என்றால் சரியல்ல. அவரது கட்டிடத்தில் தொழில் நடத்த அனுமதி கொடுத்தார். 30 வருடங்கள் பழகியதால் வாதி சம்பந்தமான விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி அவரது அப்பாவை கத்தியால் இரண்டு முறையும் அருவாளால் வெட்டியதும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு பயந்து வாதியின் அப்பா சொந்த வீட்டைவிட்டு வாடகை வீட்டில் தெங்கம்புதூரிலும், NGO காலனியிலும் இருந்தார் என்றால் தெங்கம்புதூரில் இருந்த விபரம் எனக்கு தெரியும். மற்றது தெரியாது.

6. பட்டிகை சொத்தில் வாதியும், வாதியின் அப்பாவும் அனுபவத்தில் இருந்ததாக சொல்லிய விபரம் பொய்யானவை என்றால் சரியல்ல. வாதிக்கு பட்டிகை சொத்தில் உரிமை உண்டு வாதி கோரியுள்ளபடி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று நான்

சொல்லியிருப்பது என்னுடைய நான் சொல்லிய விபரங்களா என்றால் இல்லை. எந்த காலங்களிலும் ரூ.15000 முன்பணம் கொடுத்து வழக்கு சொத்து வாடகைக்கு எடுக்க வில்லை ரூ.800 மாத வாடகை கொடுக்கவில்லை வாடகை கேட்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதிக்காக வாதியின் வழக்கறிஞர் என்னை அழைத்தார். வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என்னுடைய சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.